# மலேசியக் கிறிஸ்துவச் சம்மேளனம்

## பொதுத் தேர்தல் செய்தி

பொதுத் தேர்தலுக்கு நம் நாடு தயாராகி வரும் வேளையில் நல்ல குடிமக்கள் என்ற முறையில் எல்லாக் கிறிஸ்துவர்களும் தங்களது வாக்குரிமையை பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். உங்களுக்கும் நாட்டுக்கும் தொடர்புடைய விவகாரங்களையும் வேட்பாளர்களின் விவரங்களையும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் ஆகியவற்றை கிறிஸ்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராயுங்கள். சிந்தனை தெளிவுக்கும் யும் தூர நோக்கிற்கும் செபியுங்கள்.

பொறுப்புடன் உங்கள் வாக்கைச் செலுத்துவதற்கு, கீழ் காணும் அம்சங்களை செபத்துடன் பரிசீலிக்கும்படி உங்களை அழைக்கின்றோம்.

**அ. நமது அக்கறைக்குரிய விஷயங்கள் பற்றி பைபிள் என்ன கூறுகிறது.**

வாழ்க்கை செலவீனம், சமூக விவகாரங்கள், குற்றச்செயல் விகிதம், சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் முதலியவை தலையாய அக்கறைக்குரிய விஷயங்கள் என அண்மையில் ஸ்டார் பத்திரிகை வெளியிட்ட கருத்துக் கணிப்பு காட்டுகிறது. கிறிஸ்துவர் என்ற முறையில் நாமும் அவற்றில் அக்கறை காட்ட வேண்டும். ஏனெனில் கடவுளுக்கும் அவற்றில் அக்கறை உண்டு.

கடவுள் நீதியும் நேர்மையும் உடையவர் என்பதோடு அன்பும் கருணையுமிக்கவர் என நாம் பைபிளில் அறிகிறோம். அதே வேளையில் நமக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் வழங்கியுள்ளார். நேரிய மற்றும் ஆன்மீக முறையிலான சமூகத்தில் எல்லா மனிதர்களும் நல்வாழ்வு பெற வேண்டுமென அவர் விரும்புகிறார்.

அனைத்து மக்களிடையே நல்லெண்ணமும் சமாதானமும் நிலவ இறைவன் ஆசிக்கின்றார். அவரது அன்புறவில், அண்டை-அயலார் உறவையும் நல்லிணக்கத்தையும் பரஸ்பர அடிப்படையில் கட்டியெழுப்ப நாம் அழைக்கப் பெற்றிருக்கிறோம்.

இக்காலக் கட்டத்தில் இறை படைப்புக்கும் மருட்டல் விடுக்கப்படுகிறது. பொறுப்புள்ள காவலர்களாக நாம் இருக்க வேண்டும் என இறைவன் விரும்புகிறார். பூமியின் வளங்களைப் பாதுகாத்து கடவுள் படைத்த அனைத்துக்கும் நன்மை பயக்க வேண்டும்.

**ஆ. அரசியல் கட்சிகள்: அவற்றின் கொள்கைகளும் வாக்குறுதிகளும்**

அரசியல் கட்சிகள் அவற்றின் தேர்தல் அறிக்கைகள் மற்றும் கொள்கைகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யுங்கள். நீதி,நியாயம்,தனிநபர் உரிமை,தேசிய ஒற்றுமை, பொருளாதார மேம்பாடு, சுற்றுப்புறப் பாதுகாப்பு மற்றும் உடல் ஊனமுற்றோர்,நோயாளிகள், ஏழை-எளியோர் ஆகியோரின் சமூக நலம் முதலியவற்றில் அவற்றின் கொள்கை நிலையையும் ஆராய வேண்டும். அவற்றின்

அரசியல் கருத்துக்களும் கொள்கைகளும் இறை சித்தத்தையும் கிறிஸ்துவப் பண்புகளையும் பிரதிபலிக்கின்றனவா?

## இ. வேட்பாளர்கள்

வேட்பாளர்களை ஆழமாக ஆராயுங்கள். அவர்களின் நம்பகத்தன்மை, நேர்மை, தலைமைத்துவ ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் மதிப்பு நலன்களை ஆராயுங்கள். அரசியலமைப்பு உரிமை, குடிமக்களின் சுதந்திரம், சமய சுதந்திரம் முதலியவற்றில் அவர்களின் கடந்த கால நிலைக்கும் கவனம் செலுத்துங்கள். மேலும் அவர்களுடன் சுலபமாக தொடர்பு கொள்ள முடியுமா?

உங்கள் தொகுதியில் நிற்கும் வேட்பாளர்களுக்காக செபிக்க மறவாதீர்கள். பொதுத் தேர்தலில் எழுப்பப்படும் விவகாரங்களையும் அவற்றின் விளைவையும் மதிப்பீடு செய்யுங்கள். நாள்தோறும் நேரத்தை ஒதுக்கி செபம் செய்யுங்கள். உங்கள் வட்டாரத் திருச்சபை ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளும் கலந்து கொள்ளுங்கள். ஆண்டவனைச் செபிப்பதும், ஜனநாயக நமது உரிமையான வாக்களிப்பதும்; கடவுளுக்கும் நமக்கும் நமது எதிர்கால தலைமுறைக்கும் நமது நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய கடமை. எல்லா குடிமக்களும் அன்பு, நீதி, சமாதானம், சுதந்திரம் பொருளாதார வளப்பம் ஆகியவற்றை அனுபவிக்கும் நாட்டில் மலேசியர்கள் வாழ வேண்டு என்பது நமது அவா.

மலேசியக் கிறிஸ்துவ சம்மேளனம் எல்லா மலேசியர்களுடனும் சேர்ந்து எதிர்வரும் பொதுத் தேர்தல் நியாயமாக நடைபெற விரும்புகிறது. எந்தவொரு விவகாரத்தையோ குறிப்பிட்ட சமூகத்தையோ தனிமைப்படுத்தி நியாயமற்ற முறையில் விமர்சனம் செய்யும் முயற்சிகளை அரசியல்வாதிகள் மேற்கொள்ள மாட்டார்கள் என நம்புவோம்.

வாக்குகளை செலுத்தும் போது விவேகமான முடிவை செய்ய இறைவனின் ஆசி உங்கள் அனைவர் மீதும் தங்குவதாக. மனித விருப்பத்திற்கு மேலாக இறை சித்தத்தின் மீது நம்பிக்கை வைத்து மலேசிய மக்கள் அனைவரும் தங்களது பிரதிநிதிகளை நியாயமான முறையில் தேர்வு செய்யும் பொதுத் தேர்தல் இது அமைவதாக!

அன்பும் சமாதானமும் உங்களோடு இருப்பதாக; நன்றி

ஆயர் போல் டான் சீ இங், சேச
தலைவர்

ஆயர் டத்தோ ஜோன் லீ
உதவித்தலைவர்

| | |
|---|---|
| அருட்திரு. டாக்டர் தோமஸ் பிலிப்ஸ் | அருட்திரு. ஈ ஹேங் செங் |
| உதவித் தலைவர் | உதவித் தலைவர் |